இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 01.01.2026

# புத்தாண்டு பிறக்கட்டும்! புத்துணர்வு ஆட்சி தொடரட்டும்!



**2025** ஆம் ஆண்டு முடிவுற்று 2026 ஆம் ஆண்டு பிறக்கிறது.

தனிமனிதரைப் பொறுத்தவரையில் ஆண்டொன்று போனால், வயதொன்று கூடும். சமூகத்துக்கு, மாநிலத்துக்கு, நாட்டுக்கு என்றால் அது மேல் நோக்கிய வளர்ச்சியின் தொடர்ச்சியாக அமைய வேண்டும். அது தான் புத்தாண்டுக்கு ஆக்கப் பூர்வமான பொருளாக அமையும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 2026 ஆம் ஆண்டு என்பது சட்டமன்றப் பொதுத்தேர்தல் நடைபெறப் போகும் ஆண்டு ஆகும். ஏழாவது முறையாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைக்கப் போகும் ஆண்டு ஆகும். 'திராவிட மாடல்' ஆட்சியின் நாயகன் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் இரண்டாவது முறையாக ஆட்சி அமைக்கப் போகும் ஆண்டு ஆகும்.

**'இது ஒரு கட்சியின் ஆட்சியாக இல்லாமல் அனைவருக்குமான ஆட்சியாக அமையும்' என்று ஆட்சி அமைக்கும் முன், மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள். 'வாக்களித்தவர்கள் மகிழும் வகையில், வாக்களிக்க மறந்தவர்கள் வருந்தும் அளவுக்கு எனது ஆட்சி இருக்கும்' என்று சொன்னார்கள். அதை நேரடி சாட்சியங்கள் மூலமாக நாம் பார்த்து வருகிறோம்.**

திராவிட முன்னேற்றக் கழகத்தவர் மட்டுமல்ல; கூட்டணிக் கட்சியினர் மட்டுமல்ல; அனைவரும் பாராட்டிப் போற்றும் ஆட்சியாக அமைந்துள்ளது திராவிட மாடல் ஆட்சி. எதிர்க்கட்சிகளே கூட, விமர்சனம் செய்ய வேண்டும் என்பதற்காகச் செய்கிறார்களே தவிர, பெரிய குற்றச்சாட்டுகளை வைக்க முடியாத அளவில் ஆட்சியை நடத்தி வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**முதலமைச்சரின் செயல்பாடுகள், எதிரிகளாலும் குற்றம் சாட்டப்பட முடியாத வகையில், குறை சொல்ல முடியாத வகையில் அமைந்துள்ளது. பல்வேறு குடைச்சல்களைக் கொடுக்கும் ஒன்றிய அரசின் அமைச்சர்கள் கூட தி.மு.க. அரசின் மீது குறை சொல்லவில்லை. முதலமைச்சர் மீது குற்றச்சாட்டு கள் வைக்கவில்லை. ஒன்றிய அரசின் சார்பில் வெளியிடப்படும் அனைத்து அறிக்கைகளிலும் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக உள்ளது. அனைத்து வளர்ச்சிக் குறியீட்டிலும் தமிழ்நாடு வளர்ச்சியைத் தொட்டு, அதில் நின்று நிலைத்துள்ளது.**

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியை 11.19 விழுக்காடு என்ற அளவுக்கு உயர்த்தி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இது யாராலும் அடைய முடியாத சாதனை ஆகும். ஒன்றிய அமைச்சகத்தின் தரவுகளின்படி, 2024-25 ஆம் ஆண்டிற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களின் வளர்ச்சி புள்ளிவிவரங்கள் வெளியாகி இருக்கிறது. அதில் தான் இது இடம்பெற்றுள்ளது.

தி.மு.க. ஆட்சிக்கு வரும் போது 2021 ஆம் ஆண்டில் 7.89 விழுக்காடாக இருந்தது. தற்போது தமிழ்நாடு 11.19 விழுக்காடாக உயர்ந்து விட்டது. இதுதான் தமிழ்நாட்டின், முதலமைச்சரின் தொலைநோக்குப் பார்வைக்கு கிடைத்த வெற்றியாகும். 14 ஆண்டுகளுக்குப் பின், மீண்டும் இரட்டை இலக்க வளர்ச்சியைத் தமிழ்நாடு எட்டி இருக்கிறது. தமிழ்நாடு அரசு, தனக்கென ஒரு கணிப்பை முன்பு வெளியிட்டு இருந்தது. அதைவிட அதிகமான வளர்ச்சியைப் பெற்றுள்ளது தமிழ்நாடு.

இந்திய அளவை விட தமிழ்நாடு அதிகம் - மற்ற மாநிலங்களை விட தமிழ்நாடு அதிகம் - என்ற சாதனையை நிறைவேற்றி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். முதலமைச்சரின் விரிவான பொருளாதாரப் பார்வை மூலமாக இது சாத்தியமாகி உள்ளது.

**ஒரு கோடியே 31 லட்சம் பெண்கள் மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை பெறுகிறார்கள். தினந்தோறும் லட்சக்கணக்கான பெண்கள் கட்டணமில்லா பேருந்துப் பயணம் செய்கிறார்கள். 21 லட்சம் பள்ளி மாணவ, மாணவியர் தினந்தோறும் காலையில் சூடான, சுவையான உணவை உண்கிறார்கள். 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு தரப்பட்டுள்ளது.**

கடந்த நான்கு ஆண்டுகளில் புத்தாக்க நிறுவனங்களின் எண்ணிக்கை 6 மடங்கு அதிகரித்துள்ளது. இந்த நிறுவனங்களில் பாதிக்கும் மேல் பெண்கள்தான் தலைமை ஏற்று நடத்துகிறார்கள். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகபட்சமாக 13 விழுக்காடு பெண்கள் தொழில் முனைவோர்களாக பங்களித்து வருகிறார்கள்.

**நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் ஆகிய திட்டங்கள் தமிழ்நாட்டு மாணவ சமுதாயத்தில் மிகப்பெரிய கல்விப் புரட்சியை உருவாக்கிவிட்டது. உலகம் முழுக்க படிக்கச் செல்கிறார்கள், உலகம் முழுக்க வேலைக்குச் செல்கிறார்கள், பெரிய நிறுவனங்கள் எதிர்பார்க்கும் தகுதி உள்ள இளைய சமுதாயத்தை உருவாக்கி வருகிறார் முதலமைச்சர்.**

இவை அனைத்தையும் தமிழ்நாட்டின் அனைத்து மக்களும் அறிந்தும், புரிந்தும் விட்டார்கள். சமூக ஊடகங்களில் ஆட்சி தொடர்பாகவும், அரசியல் தொடர்பாகவும் மக்கள் பேட்டி எடுக்கும் அனைவருக்கும் கிடைக்கும் பதில் என்பது, 'மாண்புமிகு மு.க.ஸ்டாலின் ஆட்சி தான் நல்ல ஆட்சி', 'தி.மு.க. ஆட்சி தான் தொடர வேண்டும்' என்பதாக இருக்கிறது. இவை அனைத்துக்கும் மேலாக, தனிப்பட்ட முறையில் முதலமைச்சர் மீது மிகப்பெரிய அளவில், 'நல்ல மனிதர்' என்ற பிம்பம் மக்கள் மனதில் உருவாகி விட்டது.

முதலமைச்சருக்கு எதிராக இருக்கும் அனைவரையும் விட, இவரே நல்லவர், இவரே சிறந்தவர், இவரே உண்மையானவர், இவரே நல்லது செய்பவர், இவரே நமக்காக நிற்பவர், இவரது ஆட்சியில்தான் நன்மைகள் கிடைக்கும், இவர் ஆட்சி தொடர்ந்தால்தான் இதுவரை கிடைத்த நன்மைகள் தொடரும், இன்னும் பல நன்மைகள் கிடைக்கும் என்று தமிழ்நாட்டு மக்கள் நினைக்கிறார்கள். இதனைத் தான் தேர்தல் முடிவாக 2026ஆம் ஆண்டில் காண இருக்கிறோம்.

**புத்தாண்டு பிறக்கட்டும்!**

**புத்துணர்வு ஆட்சி தொடரட்டும்!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (31.12.2025) முகாம் அலுவலகத்தில், ஆங்கிலப் புத்தாண்டையொட்டி, தலைமைச் செயலாளர் ந.முருகானந்தம். சந்தித்து வாழ்த்து பெற்றார்,



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (31.12.2025) முகாம் அலுவலகத்தில், ஆங்கிலப் புத்தாண்டையொட்டி காவல்துறை தலைமை இயக்குநர் க. வெங்கடராமன், சந்தித்து வாழ்த்து பெற்றார்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (31.12.2025) முகாம் அலுவலகத்தில், கழக தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள ராஜராஜன் மாணிக்கம் தனது குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் கழக தகவல் தொழில்நுட்ப அணி செயலாளரும், தொழில் துறை அமைச்சருமான முனைவர் டி.ஆர்.பி. ராஜா உள்ளார்.

### சென்னை – செங்கல்பட்டு – சேலம் – இராமநாதபுரம் மாவட்டங்களில்

## ரூ.48.76 கோடியில் - விளையாட்டு உட் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள்!

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜன.1-**

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 48.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை, செங்கல்பட்டு, சேலம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் செயற்கை இழை ஓடுதளப் பாதை மறுசீரமைக்கும் பணி, சர்வதேச தரத்திலான டிராப் மற்றும் ஸ்கீட் துப்பாக்கிச் சுடுதல் பயிற்சி அகாடமி, புதிய செயற்கை இழை ஓடுதள பாதை உள்ளிட்ட விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளுக்கு அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாடு துணை முதலமைச்சர். உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.12.2025) குறிஞ்சி முகாம் அலுவலத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் சார்பில் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் 8.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயற்கை இழை ஓடுதளப் பாதை மறுசீரமைக்கும் பணியினை காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம் கீரப்பாக்கம் கிராமத்தில் 17.01 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்திலான டிராப் மற்றும் ஸ்கீட் துப்பாக்கிச் சுடுதல் பயிற்சி அகாடமி அமைக்கும் பணி, சேலம் மாவட்ட பல்நோக்கு விளையாட்டு வளாகத்தில் 11.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய செயற்கை இழை ஓடுதள பாதை அமைக்கும் பணி, இராமநாதபுரம் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 12.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய செயற்கை இழை ஓடுதளப் பாதை அமைக்கும் பணி என மொத்தம் 48.76 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான விளையாட்டு உள்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளுக்கு காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டி, பணிகளைத் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், உலகின் எப்பகுதியில் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளிலும் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்துகொள்ள பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதற்காக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை உருவாக்கி செயல்படுத்தி வருகின்றார். இந்த அறக்கட்டளை நிதியின் கீழ் தமிழ்நாட்டின் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தங்களுக்கு தேவையான அதிநவீன விளையாட்டு உபகரணங்களை வாங்கி கொள்ளவும், தேசிய, சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்வதற்கான செலவு, தங்குமிடம், பயிற்சி பெறுதல், பயணத்திற்கான செலவுகளை மேற்கொள்ள நிதி உதவி வழங்க உத்தரவிட்டுள்ளார்.

அதனடிப்படையில் தேசிய, சர்வதேச போட்டிகளில் பங்கேற்ற மற்றும் பதக்கங்களை வென்ற வீரர், வீராங்கனைகள் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கும் வகையில் தயார் செய்வதற்காக தடகள வீரர்கள் ர.மானவ், ஜெ.ஆதர்ஷ் ராம், கூடைப் பந்தாட்ட வீரர் பி. ஃபியோடர் ஆதித்தன், குத்துச் சண்டை வீரர் பி.தர்ஷன், தடகள வீரர் யோபின், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வாலிபால் வீராங்கனைகள் ம. ராகஸ்ரீ , பா.சாதனா ஆகிய விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்கிட மொத்தம் 2,80,000/- ரூபாய்க்கான காசோலையை துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மேலும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வென்ற சைக்கிளிங் வீரர்கள் ச.பிரனேஷ் மற்றும் செள.கவிஷ் ஆகியோருக்கு மொத்தம் 12,48,580/- மதிப்பிலான சர்வதேச தரத்திலான சைக்கிள் மற்றும் உபகரணங்களை வழங்கினார்.

தொடர்ந்து சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்று வரும் நீச்சல் வீர்ர் உ.அபிஷேக்கிற்கு மலேசியாவிற்கு சென்று பயிற்சி மேற்கொள்வதற்காக ரூ.35,000/-க்கான காசோலையை துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இன்றைய தினம் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியின் கீழ் மொத்தம் 15,63,580/- ரூபாய் மதிப்பிலான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பயிற்சிக்கான உதவித் தொகை காசோலைகளை வழங்கினார்.

பல்வேறு சர்வதேச போட்டிகளில் பதக்கங்கள் வென்ற ஸ்னூக்கர், பில்லியர்ட்ஸ், ரோல் பால் மற்றும் பூப்பந்தாட்ட விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகள் இன்று துணை முதலமைச்சர் அவர்களை சந்தித்து தாங்கள் வென்ற பதங்கங்கள் மற்றும் சான்றிதழ்களை காண்பித்து வாழ்த்து பெற்றார்கள்.

இந்நிகழ்ச்சிகளில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், வனம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. ராஜேந்திரன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், இ.பரந்தாமன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





நேற்று (31.12.2025) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமான பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் இராயபுரம் மண்டலம், வார்டு–57, வால்டாக்ஸ் சாலையில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளியில், மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் ரூபாய் 1.15 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள் கட்டடத்தினை திறந்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர். பிரியா, மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மண்டலக்குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் ராஜேஷ் ஜெயின், ல.நவீன், வெ.பரிமளம், மண்டல அலுவலர் விஜய் பாபு, செயற்பொறியாளர் சிவப்பிரகாசம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.